| Sl. No. | Frequently Asked Questions | Answers |
|---|---|---|
| 1. | Once in how many years should you renew the employment registration? | Applicants registered with Employment Exchange, should renew their registration once in every three years. Renewal should be done within three months from the due date. If not done within the time limit, you can use 18 month renewal concession to renew your registration. You can renew directly or through online. The persons registered under differently abled category are exempted from the renewal. |
| 2. | Provide the number of employment exchanges functioning in Tamil Nadu and their contact details. | Details of all subordinate offices and their contact details across Tamil Nadu are published under the topic "contact details" on the website<br><br>www.tnvelaivaaippu.gov.in. |
| 3. | How can one know the details of the registered candidates (address, date of birth, registration number, registration seniority) in the Live Register? | The total number of registered candidates who are waiting in live register with particular qualification can be known. This number also varies from time to time subject to new registration, renewal, change of registration to other districts, etc. The registration number of the registered persons in the Employment Department website is used as user id and date of birth as password. Therefore, |

| | | |
|---|---|---|
| | | the third party information cannot be provided under RTI Act, 2005, 8(1) (j). |
| 4. | Provide Total number of registered persons throughout the State? | The website www.tnvelaivaaippu.gov.in has provided the total number of candidates registered at State Level based on educational qualification and age. |
| 5. | How can the applicant know the cut off date seniority of the registered qualification? | The cut off date of Seniority for the vacancies notified at district level for the current month can be downloaded district wise from the website<br><br>www.tnvelaivaaippu.gov.in. |
| 6. | How many persons will be nominated for one vacancy? | As per the existing government norms, the nomination is being done at 1:5 ratio. |
| 7. | Whether the vacancies in all departments of the Government of Tamil Nadu are filled up only through Employment Exchange nomination? | The vacancies of all the departments of Government of Tamil Nadu, which do not come under the purview of Tamil Nadu Public Service Commission (TNPSC), Teachers Recruitment Board (TRB), Medical Service Recruitment Board (MRB), Tamil Nadu Uniform Services Recruitment Board (TNUSRB) etc., and the vacancies in State Government undertakings & Local Bodies are notified to the District Employment and Coaching Cum Guidance Centre's, and nomination is being done at 1:5 ratio. Further the vacancies , are also |

| | | |
|---|---|---|
| | | published in two newspapers (one in English and one in vernacular language) by the employers as per G.O.44, Labour and Employment Department (T2) dated 11.03.2015. The candidates nominated from the Employment Exchange and the candidates who have applied through newspaper advertisements are both considered for interview and selection |
| 8. | What is the cut of date seniority for a particular qualification? | The Seniority List can be prepared only, after the vacancies for a particular qualification were notified to Employment Exchange. |
| 9. | Can the registrant know the serial number of the nominated list for particular vacancy? | When Vacancies are Notified by the Employers, registrants will be nominated subject to the number of vacancies, age limit, communal rotation and other norms. If one applicant has been nominated to the vacancy on the basis of seniority, the serial number of the applicant can be revealed on request. |
| 10. | It is 20 years since I have registered 10th standard in the Employment Exchange. Why was my name not nominated for an interview? What is the reason? | As mentioned by the employer, the registrants are nominated subject to the age, Communal reservation, qualification etc. The candidates will be considered for nomination, if the seniority of the candidate, comes under the purview of cut off date seniority. The candidates will |

| | | |
|---|---|---|
| | | get government jobs not only through sponsoring by Employment Exchanges, but also through appearing exams notified by the Tamil Nadu Public Service Commission (TNPSC), Union public Services Commission, Railway recruitment Board (RRB), Teachers Recruitment Board (TRB), Institute of Banking Personnel Selection (IBPS) and Staff Selection Commission (SSC) etc,. Therefore, you can get Government job by appearing those Competitive Examinations conducted by these recruitment Boards. Further, free Coaching Classes are conducted for these Competitive Examinations through Study Circles functioning in each District Employment and Career Guidance Centre and the registrants are requested to participate in the coaching classes. Vacancies which are notified to employment exchanges are also published in newspapers. The registrants can apply directly to such vacancies. |
| 11. | Please provide the details of age relaxation for the registrants of District Employment and Career Guidance Centres. | As per the existing norms, the age limit for SC/ST/SCA category is 37, age limit for MBC/BC/BCM category is 34 and 32 for OC category. Apart from this, the candidates having registered with SSLC |

| | | |
|---|---|---|
| | | failed qualification have been given a maximum of 5 years of age relaxation subject to renewal period of 15 years. (one year age relaxation for every renewal). Destitute Widows of all Communities are given age concession on par with SC/ST age concession. Age relaxation of 10 years is given to Differently Abled persons. Ex-servicemen are given age relaxation up to 48 years to General Category and 53 years for other categories (SC/ST/SCA/BCM/MBC/BC). As per rule 20(8) Tamilnadu government servants (conditions of service) Act-2016, the maximum age limit shall not apply to the appointment of a candidate ayvu2/14722/2023 I/179099/2025 belonging to any of the Scheduled Castes, Scheduled Tribes, Backward Class Muslims, Backward Classes, Most Backward Class or Denotified Communities or of destitute widows of all castes to a post for which the prescribed qualification lower than a degree , if such candidate possesses a general educational qualification which is higher than the minimum general educational qualification.(Government Letter No. 46496/92-1, Personnel and Administrative |

| | | |
|---|---|---|
| | | Reforms Department, dated 01.07.1992) |
| 12. | How do I know the details of the differently abled registrants? | The total number of Differently Abled candidates registered at District Employment and career Guidance Centres across the state has been published on the website www.tnvelaivaaippu.gov.in under the Topic Statistics – Employment Exchange Statistics |
| 13. | What are the terms and conditions for receiving Unemployment Assistance under the Unemployment Assistance Scheme? | Unemployment Assistance for Unemployed Youth is being given for three consecutive years to the educated registrants who have completed 5 years of registration with the District Employment and career Guidance Centres and are available in the Live Register. Beneficiary's family annual income should be within Rs.72,000 / - to avail this assistance. The age limit is 45 for SC / ST and 40 for other categories. Unemployment Assistance will be discontinued if the candidate gets government employment during the grant period. Disabled registrants can receive the Unemployment Assistance without any age limit if they have completed one year of registration with the District Employment and Coaching Cum Guidance Centres. Unemployment Assistance will be |

| | | |
|---|---|---|
| | | given for 10 consecutive years. There is no parental income ceiling and age limit. Unemployment Assistance details for unemployed youth are as follows:<br><br>General Candidates:<br><br>SSLC Failed – Rs. 200/-<br><br>SSLC – Rs. 300/-<br><br>HSC – Rs. 400/-<br><br>Degree – Rs.600/-<br><br>Differently Abled Candidates:<br><br>Illiterate to SSLC – Rs.600/-<br><br>HSC – Rs..750/-<br><br>Degree – Rs.1000/- |
| 14. | Inform about the procedure of transfer of registration from one district to another without any change in the registration seniority. | If the applicant has any one of the following residence proof documents , can apply for transfer of employment registration without any change in the registration seniority: (Go.Ms.No.185,Labour & Employment Department(T2),dt.16.11.2020)<br><br>1.Ration Card.<br><br>2.Aadhar Card |

| | | |
|---|---|---|
| | | 3.Pan Card.<br>4.Voter Id.<br>5.Passport.<br>6.Driving License. |
| 15. | What should be done by anapplicant with general Educational Qualifications to get employment? | Candidates are registered for Skill Training in all the District Employment and Career Guidance Centres. Applicants who want to get skill training can register themselves for various skill training programmes (**www.tnskill.tn.gov.in**) provided by Skills providers of TNSDC in their website and also get employment opportunity in Private Sector. |
| 16. | I am studying +2. What kind of courses shall I take to get employment? Also, how do I know the education scholarship details? | The information on various higher education opportunities and scholarships for students are provided in schools / colleges as well as in office premises by all District Employment and Career Guidance Centres. Career Booklets consisting Higher Education, Government jobs, Self Employment, Scholarship details are available under the topic, Publication in the Departmental website. **www.tnvelaivaaippu.gov.in** |
| 17. | I am a graduate and residing in a village. I want to prepare for Competitive | All the syllabi required for the competitive examinations are available in our department's website |

| | | |
|---|---|---|
| | Exams with the aim of getting government job. I was unable to come to the District Employment and Coaching Cum Guidance Centres daily to attend coaching class. How do I prepare for a Competitive Exam? | **(www.tamilnaducareerservices.tn.gov.in)** So, you can register yourself in this website, and download the study materials of various Competitive exams from this website. |
| 18. | I am studying in Government Arts College. How to prepare for competitive exams from now onwards? | Free Coaching classes for all Competitive Exams are conducted by the Employment Wing of this Department at 10 Government Universities / Government Arts Colleges. Candidates studying in those colleges can benefit by attending these coaching classes |
| 19. | I am a student of Adi-Dravidar community, staying and studying in a college hostel. How do I prepare for Competitive Exams? | Coaching Cum Guidance Centres for Scheduled Caste and Scheduled Tribes are functioning in Tirunelveli, Trichy, Coimbatore, Vellore, Cuddalore and Ooty . Candidates can visit these Centres to know more about Higher Education opportunities and Competitive Exams. In addition, free Coaching Classes for Competitive Examinations are being conducted for students staying in college hostels for Scheduled Caste /Scheduled Tribe students through these centres. |

| | | |
|---|---|---|
| | | Candidates who want to prepare for competitive exams can benefit by attending these Coaching Classes. |
| 20. | What can be done to get Employment in Private Sector until getting Government Job? | Job fair for Private Sector employment is held on second or third Friday every month at all District Employment and career Guidance Centres. In addition to this, Mega job fairs are conducted once in six months by all District Employment and Career Guidance Centres. The Candidates can attend such job fairs and get employment in private sector companies. Their registration will not be removed from the live register of District Employment and Career Guidance Centre, if they get Employment in the private sector. The website "Tamil Nadu Private job Portal" is functioning since, 16.06.2020 with an objective to provide employment to unemployed youth in the private sector. Candidates who want to work in Private Sector can avail the services of this website<br><br>(**www.tnprivatejobs.tn.gov.in**) |
| 21. | What should I do to become self-employed? | Self-employment motivational program is conducted at all District Employment and Career Guidance Centres and also in various educational institutions for |

| | | |
|---|---|---|
| | | assisting job seekers who are interested in Self Employment. The details regarding the financial assistance and schemes available with District Industries Centre, TIIC, SIDCO, MUDRA and Nationalized Banks for self employment are rendered to such interested candidates. |
| 22. | Can I prepare for government jobs from home? | Coaching classes for competitive exams are being telecast on scheduled hours (Monday to Friday from 7a.m to 9 a.m and repeat telecast from 7p.m to 9 p.m) through kalvi tv. The videos telecast are also being uploaded in the department's You Tube Channel ("TN Career Services Employment"). The essence of this is that you can prepare for government jobs as if you were at home. |

| **வ. எண்** | **வினாக்கள்** | **பதில்கள்** |
|---|---|---|
| 1. | வேலைவாய்ப்பு பதிவை | வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள |

| | | |
|---|---|---|
| | எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தல் செய்ய வேண்டும்? | மனுதாரர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தல் செய்ய வேண்டும். புதுப்பிக்க வேண்டிய கெடு தேதியிலிருந்து மூன்று மாதத்தில் புதுப்பிக்க வேண்டும். தவறும் நேர்வில் 18 மாத சலுகையை பயன்படுத்தி புதுப்பித்தல் செய்யலாம். நேரிலோ, இணையதளம் வாயிலாகவோ புதுப்பிக்கலாம். இணையதள முகவரி www.tnvelaivaaippu.gov.in மாற்றுத்திறனாளி முன்னுரிமை பிரிவில் பதிவு செய்துள்ள மாற்றுத்திறனாளிப் பதிவுதாரர்களுக்கு புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. |
| 2. | தமிழகத்தில் செயல்பட்டு வரும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் எண்ணிக்கை மற்றும் முகவரி குறித்த விவரங்களை அளிக்கவும்? | தமிழகத்தில் செயல்பட்டு வரும் அனைத்து சார்நிலை அலுவலகங்கள் மற்றும் முகவரி குறித்த விவரங்கள் www.tnvelaivaaippu.gov.in என்ற இணையதளத்தில் Contact us என்ற தலைப்பின்கீழ் வெளியிடப்பட்டுள்ளது. |
| 3. | வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து உயிர் பதிவேட்டில் உள்ள குறிப்பிட்ட கல்வித்தகுதி கொண்ட பதிவுதாரர்களின் விவரங்கள் (முகவரி, பிறந்த தேதி, பதிவு எண், பதிவு மூப்பு விவரம்) குறித்து எவ்வாறு அறியலாம்? | வேலைவாய்ப்பு அலுவலக உயிர் பதிவேட்டில் ஒரு குறிப்பிட்ட கல்வித்தகுதியை பதிவு செய்து காத்திருக்கும் பதிவுதாரர்களின் மொத்த எண்ணிக்கை மட்டும் அறிய இயலும். இந்த எண்ணிக்கையும் அவ்வப்போது புதுப்பதிவு, புதுப்பித்தல், வேறு மாவட்ட பதிவு மாற்றம் போன்ற காரணங்களினால் மாறுதலுக்குட்பட்டது. வேலைவாய்ப்பு துறையின் இணையதளத்தில் பதிவுதாரரின் பதிவு எண் பயனர் குறியீடாகவும் (User id) பிறந்த தேதி கடவுச்சொல்லாகவும் (Password) பயன்படுத்தப்படுகிறது. எனவே, மூன்றாம் நபரின் கடவுச்சொல்லை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 8(1) (j)ன் படி வழங்க இயலாது. |
| 4. | மாநிலம் முழுவதும் பதிவு செய்துள்ள பதிவுதாரர்களின் மொத்த எண்ணிக்கை? | www.tnvelaivaaippu.gov.in என்ற இணையதளத்தில் Statistics என்ற தலைப்பில் கல்வித்தகுதி, வயது அடிப்படையில் மாநில அளவில் பதிவு செய்துள்ள மொத்த மனுதாரர்களின் எண்ணிக்கை வழங்கப்பட்டுள்ளது. |
| 5. | மனுதாரர் தான் பதிவு செய்த | நடப்பு மாதத்தில் கேட்பு செய்யப்பட்ட |

| | | |
|---|---|---|
| | கல்வித்தகுதி குறித்த பரிந்துரை பதிவுமூப்பு விவரத்தை எவ்வாறு அறியலாம்? | பணிக்காலியிடங்களுக்கான பரிந்துரை பதிவு மூப்பு தேதியை மட்டும் மாவட்ட வாரியான அறிக்கையாக www.tnvelaivaaippu.gov.in என்ற இணையதளத்தில் cut off date of seniority என்ற தலைப்பின் கீழ் அறிந்து கொள்ளலாம். |
| 6. | ஒரு பணி காலியிடத்திற்கு தெரிவு செய்வதற்கு எத்தனை நபர்கள் பரிந்துரை செய்யப்படுவர்? | தற்போதுள்ள அரசு விதிமுறைகளின் படி, ஒரு காலியிடத்திற்கு 5 நபர்கள் என்ற வீதத்தில் பரிந்துரைக்கப்படுகிறனர். |
| 7. | தமிழக அரசின் அனைத்து துறைகளிலும் ஏற்படும் பணிக்காலியிடங்கள் வேலைவாய்ப்பக பரிந்துரை மூலம் மட்டும் நிரப்பப்படுகிறதா என்பதை தெரிவிக்கவும்? | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC), ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB), மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (MRB), தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் (TNUSRB) போன்ற தேர்வு வாரியங்களின் வரம்புக்கு உட்படாத தமிழக அரசின் அனைத்து துறைகளிலும் ஏற்படும் பணிக்காலியிடங்களுக்கும், மாநில அரசுசார் நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித்துறைகளில் ஏற்படும் பணிக்காலியிடங்களுக்கும், தொடர்புடைய அலுவலகங்கள் மூலம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் அறிவிப்பு செய்யப்பட்டு 1:5 என்ற விகிதத்தில் பதிவுதாரர்கள் பரிந்துரைக்கப்படுகின்றனர். மேலும் இப்பணிக்காலியிடங்கள் குறித்த அறிவிப்பு அரசாணை 44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை (T2) நாள்.11.03.2015-ன் படி இரண்டு செய்தி தாள்களிலும்(ஆங்கிலம்-1 மற்றும் வட்டார மொழி-1) விளம்பரம் செய்யப்படுகிறது. மேற்படி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் பட்டியலில் உள்ள மனுதாரர்களையும், செய்தித்தாள் விளம்பரம் மூலம் விண்ணப்பம் செய்த மனுதாரர்களையும் ஒருங்கிணைத்து வேலையளிப்போரால் தேர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| 8. | ஒரு குறிப்பிட்ட கல்வித்தகுதிக்கு பரிந்துரை பதிவு மூப்பு என்ன என்று கூற | ஒரு குறிப்பிட்ட கல்வித்தகுதியைக் கொண்ட பணிக்காலியிட அறிவிப்புக் கடிதம் பெறப்படும் நேர்வில் மட்டுமே அதற்கான பதிவு மூப்பு பட்டியல் |

| | | |
|---|---|---|
| | இயலுமா? | தயார் செய்ய இயலும். அதன் பிறகே பதிவு மூப்பு அறிய இயலும். |
| 9. | ஒரு பதிவுதாரர் குறிப்பிட்ட பணிக்காலிடத்திற்கு பரிந்துரை செய்யப்படும் நேர்வில் எத்தனையாவது வரிசையில் இடம் பெற்றுள்ளார் என அறிய இயலுமா? | வேலையளிப்பவர்களிடமிருந்து பணிக்காலியிடங்கள் அறிவிக்கப்படும்பொழுது வேலையளிப்பவரால் கேட்கப்படும் பணிக்காலிடங்களின் எண்ணிக்கை, வயது வரம்பு, இனச்சுழற்சி மற்றும் இதர விதிமுறைகளுக்குட்பட்டு பரிந்துரை செய்யப்படும். அப்போது அந்தப் பணிக்காலியிடத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களில், பதிவு மூப்பு அடிப்படையில் மனுதாரர் பரிந்துரை செய்யப்பட்டிருப்பின் அம்மனுதாரரின் வரிசை எண்ணை கோரிக்கையின் அடிப்படையில் தெரிவிக்க இயலும். |
| 10. | நான் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பதிவு செய்து 20 ஆண்டுகளாகிறது. ஏன் எனது பெயர் ஒரு நேர்முகத்தேர்விற்கு கூட பரிந்துரை செய்யப்படவில்லை? என்ன காரணம்? | பதிவுதாரர்களின் வயது, இனம், கல்வித்தகுதி மற்றும் வேலையளிப்போர் கோரும் பிற தகுதிகளின் அடிப்படையில் பரிந்துரைத்தல் பணிகள் மேற்கொள்ளும்போது, பரிந்துரை பதிவுமூப்பு தேதிக்குள் வரும் நேர்வில் மட்டுமே தங்களது பெயர் பரிந்துரைக்க கருதப்படும். மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலமாக மட்டுமின்றி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC), சிவில் சர்வீசஸ் தேர்வாணையம் (UPSC), ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB), ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB), தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (TN-TET), வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) மற்றும் பணியாளர் தேர்வாணையம் (SSC) போன்ற பல்வேறு தேர்வு வாரியங்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் மூலமாகவும் அரசுப்பணிக்கு பணியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். எனவே, தாங்கள் மேற்கூறிய தேர்வு வாரியங்களால் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளில் கலந்து கொண்டு, அரசு பணிவாய்ப்பினை பெறலாம். மேலும், ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் |

| | | |
|---|---|---|
| | | செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டங்களில் இப்போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதால், அப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், தற்போது அனைத்து பணிக்காலியிடங்களும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் மட்டும் அல்லாது பொது விளம்பரத்தின் அடிப்படையிலும் பூர்த்தி செய்யப்படுவதால் அதனடைப்படையில் விண்ணப்பித்து வேலை பெறும் வாய்ப்புகள் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது. |
| 11. | மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவுதாரர்களுக்கு வயது வரம்பில் சலுகை குறித்து தெரிவிக்கவும். | பொதுவாக SC/ST/SCA பிரிவினருக்கு வயது வரம்பு-37, MBC/BC/BCM ஆபிரிவினருக்குவயது வரம்பு-34, OC பிரிவினருக்கு வயது வரம்பு - 32 ஆகும். இது தவிர SSLC தோல்வி பெற்று பதிவு செய்துள்ள மனுதாரர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்த ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் 1 வருடம் சலுகை என அதிகபட்சம் 5 வருடங்கள் வயது சலுகை மற்றும் பதிவு புதுபித்தல் 15 வருடம் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து சாதி ஆதரவற்ற விதவைகளுக்கும் ஆதிதிராவிடர்களுக்குண்டான வயது சலுகை அளிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பில் 10 ஆண்டுகள் வயது தளர்வு வழங்கப்படுகிறது. முன்னாள் இராணுவனத்தினருக்கு பொது பிரிவில் 48 வயது வரையிலும், மற்ற பிரிவினர் (SC/ST/SCA/MBC/BC/BCM) 53 வயது வரையிலும் தளர்வு அளித்து பரிந்துரைக்கப்படுகின்றனர். கல்வித் தகுதி """"8-ஆம் வகுப்பு தேர்ச்சி"" / 10ம் வகுப்பு தோல்வி / 10ம் வகுப்பு தேர்ச்சி எனத் தெரிவிக்கப்படும் பணிக்காலியிடங்களுக்கு, அரசு விதிகளின்படி 12-ஆம் வகுப்பு தேர்ச்சி / பட்டப் படிப்பு தேர்ச்சி பெற்றிருப்பின் வயது வரம்பில் சலுகை (Rule 20(8) தமிழ்நாடு அரசு பணியாளர் |

| | | |
|---|---|---|
| | | (சேவை நிபந்தனைகள்) சட்டம்-2016) பொருந்தும்(அரசு கடித எண் 46496/92-1, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள் 01.07.1992) |
| 12 | மாற்றுத்திறனாளி பதிவுதாரர்களின் விவரங்களை எவ்வாறு அறியலாம்? | மாநிலம் முழுவதும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகளின் மொத்த எண்ணிக்கை www.tnvelaivaaippu.gov.in என்ற இணையதளத்தில் Statistics – Employment Exchange Statistics என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. |
| 13 | வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்கான விதிமுறைகள் என்ன? | வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகையானது மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து 5 வருடங்கள் நிறைவு செய்து உயிர்பதிவேட்டில் காத்திருக்கும் கீழ்க்கண்ட கல்வித்தகுதியுடைய பதிவுதாரர்களுக்கு தொடர்ந்து மூன்று வருடங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயன்பெற பயனாளியின் குடும்ப ஆண்டு வருமானம் 72,000/-க்குள் இருக்க வேண்டும். வயது வரம்பு SC/ST பிரிவினருக்கு 45, இதர பிரிவினருக்கு 40 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உதவித்தொகை வழங்கப்பட்டு வரும் காலத்தில் அரசு பணி வாய்ப்பு கிடைத்தால் உதவித்தொகை நிறுத்தப்படும். மாற்றுத்திறனாளி பதிவுதாரர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவு செய்து இருந்தால் உச்ச வயது வரம்பு ஏதுமின்றி உதவிதொகை பெற்றுக்கொள்ளலாம். தொடர்ச்சியாக 10 வருடங்கள் உதவித்தொகை வழங்கப்படும். இவர்களுக்கு உச்ச வருமான வரம்பு ஏதும் இல்லை. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை விவரங்கள். |

| | | |
|---|---|---|
| | | பொதுபிரிவினர்:<br>SSLC failed - ரூ. 200/-<br>SSLC - ரூ.300/-<br>HSC - ரூ. 400/-<br>Degree - ரூ. 600/-<br>மாற்றுத்திறனாளிகள்:<br>Illiterate to SSLC - ரூ. 600/-<br>HSC - ரூ. 750/-<br>Degree - ரூ. 1000/-<br>தங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் அத்தகவலை தங்களது மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் உடன் தெரிவித்து உதவித்தொகையை நிறுத்தம் செய்து கொள்ள வேண்டும். வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற விண்ணப்ப படிவம் www.tnvelaivaaippu.gov.in என்ற இணையதளத்தில் Download Forms – U.A. application என்ற தலைப்பின் கீழ் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 14. | பதிவு மூப்பில் மாற்றம் ஏதுமின்றி ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு பதிவை மாற்றும் விதிமுறை குறித்து தெரிவிக்கவும். | தற்பொழுது குடிபெயர்ந்துள்ள மாவட்டத்தில் தொடர்புடைய வட்டாட்சியரிடமிருந்து குடும்ப குடிபெயர்சி சான்று (Family Migration Certificate), இருப்பிடச் சான்று (Residence Certificate) பெற்று அதன் நகல்களுடன் தாங்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் விண்ணப்பித்தால் உரிய பதிவு மூப்புடன் பதிவானது தாங்கள் கோரிய மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்படும்.<br>(அரசாணை எண் . 185, தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை (டி2) |

| | | |
|---|---|---|
| | | நாள். 16.11.2020.)<br><br>1.குடும்ப அட்டை<br>2.ஆதார் அட்டை<br>3.நிரந்தர கணக்கு எண் அட்டை<br>4. வாக்காளர் அடையாள அட்டை<br>5. கடவுச்சீட்டு<br>6.வாகன ஓட்டுநர் உரிமம் |
| 15. | பொதுக்கல்வியை மட்டும் கொண்டுள்ள இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற என்ன செய்யலாம்? | அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் திறன்பயிற்சிக்கு பதிவு செய்யப்பட்டு வருகிறது. திறன் பயிற்சி பெற விரும்பும் இளைஞர்கள், பல்வேறு திறன் பயிற்சிகளுக்கு என்ற இணையதளத்தில் தாங்களாகவே பதிவுகள் செய்து கொள்ளலாம். திறன் பயிற்சி நிறுவனங்கள், திறன் பயிற்சிக்கு இணையதளத்தில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்குவதுடன் தனியார் துறையில் வேலைவாய்ப்பினையும் பெற்றுத் தருகின்றனர். |
| 16. | நான் +2 படித்து வருகிறேன். நான் உயர்கல்வியில் என்ன மாதிரியான படிப்புகள் எடுத்து படித்தால் வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும், கல்வி உதவித்தொகை விவரங்களை எவ்வாறு தெரிந்து கொள்வது? | ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலமாக மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு உயர்கல்வி வாய்ப்பு பற்றி தகவல்களும் கல்வித்தொகை பற்றிய தகவல்களும் வழங்கப்படுகின்றன. இது போன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இத்துறையின் இணையதளத்தில் (www.tnvelaivaaippu.gov.in) Publication எனும் தலைப்பின் கீழ் மாணவர்களுக்கு வழிகாட்டும் கையேடுகள், உயர்கல்வி, அரசு வேலை, சுயவேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை போன்ற அனைத்து விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. |
| 17. | நான் ஒரு பட்டதாரி, கிராமத்தில் வசித்து வருகிறேன். அரசு வேலை | போட்டித் தேர்வை எதிர்கொள்ளும் தேர்வர்கள் வீட்டில் இருந்த படியே போட்டித்தேர்வுகளுக்கு தயார் செய்வதற்கு ஏதுவாக போட்டித்தேர்வுகளுக்கு |

| | | |
|---|---|---|
| | பெறும் நோக்கத்தில் போட்டித்தேர்வுகளுக்கு தயார் செய்ய விரும்புகிறேன். என்னால் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு தினந்தோறும் வந்து பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள இயலவில்லை. நான் போட்டித்தேர்வுக்கு தயார் செய்வது எவ்வாறு? | தேவையான அனைத்து பாடக்குறிப்புகளும் **www.tamilnaducareerservices.tn.gov.in** என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த இணையதளத்தில் தங்களின் பெயரை பதிவு செய்து கொண்டு போட்டித்தேர்வுக்கான மாதிரித் தேர்வுகள் மற்றும் பாடக்குறிப்புகள் இவற்றை பதிவிறக்கம் செய்து பயிலலாம். |
| 18 | நான் அரசு கலைக்கல்லூரியில் படித்து வருகிறேன். இப்போதிலிருந்தே போட்டித்தேர்வுகளுக்கு தயார் செய்வது எவ்வாறு? | 10 அரசு பல்கலைக்கழகங்கள் /அரசு கலைக்கல்லூரிகளில் ஆண்டுதோறும் அனைத்து போட்டித்தேர்வுகளுக்கும் இலவச பயிற்சி வகுப்புகள் இத்துறை மூலமாக நடத்தப்படுகிறது. தாங்கள் இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயன்பெறலாம். |
| 19. | நான் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவன், கல்லூரி விடுதியில் தங்கி பயின்று வருகிறேன். நான் போட்டித்தேர்வுகளுக்கு தயார் செய்வது எவ்வாறு? | வேலைவாய்ப்புத்துறையின் சார்பாக திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், வேலூர், கடலூர் மற்றும் ஊட்டி ஆகிய மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான பயிற்றுவிப்பு மையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த மையங்களுக்குச் சென்று உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் போட்டித் தேர்வுகள் குறித்த விவரங்களை தெரிந்து கொள்ளலாம். மேலும் இப்பயிற்றுவிப்பு மையங்கள் மூலம் ஆதிதிராவிடர் மாணவ, மாணவிகளுக்கான கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்காக இலவசப்பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயன்பெறலாம். |
| 20. | அரசுப்பணி கிடைக்கும் வரை தனியார் துறையில் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு என்ன செய்யலாம்? | மாதத்தின் இரண்டாவது அல்லது மூன்றாவது வெள்ளிக்கிழமை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுகிறது. மேலும் கூடுதலாக பெரிய வேலைவாய்ப்பு முகாம் 6 மாதத்திற்கு ஒரு முறையும் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் |

| | | |
|---|---|---|
| | | தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் நடத்தப்பட்டு வருகிறது. தாங்கள் இது போன்ற முகாம்களில் கலந்து கொண்டு தங்களுக்கு விருப்பமான தனியார் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் தனியார் துறையில் பணிநியமனம் பெறும் பட்சத்தில் தங்களது பதிவு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட மாட்டாது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையில் ""தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையம்"" என்னும் பிரத்யேக இணையதளம் 16.06.2020 முதல் செயல்பட்டு வருகிறது. தனியார் துறையில் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள் இந்த இணையதளத்தின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். இணையதள முகவரி **www.tnprivatejobs.tn.gov.in** |
| 21. | நான் சுயமாக தொழில்செய்து முன்னேறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? | ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் சுய வேலைவாய்ப்பிற்காக மாவட்ட தொழில் மையம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகம், சிறு தொழில் மேம்பாடு மற்றும் மறு நிதியளிப்பு நிறுவனம் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வங்கி கடன் பெற்று தொழில்செய்வது தொடர்பான அறிவுரைகள் வழங்கப்படுகிறது. இது போன்ற நிகழ்வுகளில் தாங்கள் கலந்து கொண்டு உரிய விவரங்கள் பெறலாம். |
| 22. | வீட்டில் இருந்தவாறு நான் அரசுப்பணிகளுக்கு தயாராக முடியுமா? | கல்வி தொலைகாட்சி வாயிலாக தினமும் அரசுப்பணிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுவருகிறது. திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை ஒளிபரப்பப்படுவதுடன், மாலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை மறு ஒளிபரப்பும் செய்யப்படுகிறது. இத்துறையின் You Tube Channel (TN Career Service Employment) பதிவேற்றம் |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் வீட்டில் இருந்தவாறு அரசுப்பணிகளுக்கு தயாராக முடியும். |